# ‘அன்புக்கரங்கள்’ திட்ட துவக்க விழாவில் முதல்வர் உரை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

இதற்கும் வாக்கரசியலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? வாக்கு என்பது, மக்களின் நம்பிக்கையை பெற்றதற்கான அடையாளம்! அந்த நம்பிக்கையை பெறும், கொள்கையும், செயல்திட்டமும், உழைப்பும், எங்களிடம் இருக்கிறது!

அந்த நம்பிக்கையினால் பெறப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பு, சமூகத்தின் கடைக்கோடி மனிதரையும் கை கொடுத்து மேலே தூக்கி விடு வதற்கான வாய்ப்பு! அந்தக் கையாகத்தான் என்னுடைய கை இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்! அப்படிதான், இருந்து கொண்டிருக்கிறது! பெற்றோர் வேலைக்கு செல்கிறார்கள் என்று, குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குகிறோம்.

பெற்றோரே இல்லாத குழந்தைகளை, சிங்கிள் பேரண்ட் இருக்கின்ற குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் வந்தது. அந்த அடிப்படையில் உருவானதுதான், இந்த அன்புக்கரங்கள் திட்டம்!

இந்தத் திட்டத்திற்காக, மாவட்ட ஆட்சியர்களிடம் சொல்லி, பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொருவரால் கைவிடப்பட்ட குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் மாற்றுத்திறனாளியாக இருப்பவரின் குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால், அவர்களுடைய குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால், அவர்களுடைய குழந்தைகள் என்று கணக்கெடுக்கச் சொன்னோம்.

அப்படி முதல்கட்டமாக கண்டறியப்பட்ட 6,082 குழந்தைகளுக்கும், பள்ளி படிப்பை முடிக்கின்ற வரைக்கும் இனிமேல் மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் உங்கள் வங்கி கணக்கில் வரவு வைத்திடுவோம்!

உங்களுக்கு 18 வயது ஆகின்ற வரைக்கும், நீங்கள் கல்வியை தொடர இந்த உதவித்தொகை வழங்கப்படும்! நீங்கள் பள்ளி படிப்பை முடித்த பிறகு, கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

நீங்கள் எல்லோரும் படித்து முன்னேறி வரவேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம்; எங்களுடைய இலட்சியம்! இந்த இலட்சியத்துக்கு துணையாகும் நம்முடைய திராவிட மாடல் அரசின் கரம்தான், அன்புக்கரம்!

நாளைக்கு நீங்கள் படித்து, டாக்டராக என்ஜினியராக சயிண்டிஸ்டாக ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரியாக அரசியல்வாதியாக உயர்ந்து, இந்தச் சமூகத்துக்கு, இந்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்!

உங்களுடைய வெற்றி, தமிழ்நாட்டின் ஹிஸ்ட்டரியை சொல்லவேண்டும்! அதற்கு உங்களுக்கு சப்போர்ட்டாக, உங்கள் ஃபிரண்டாக, உங்கள் பேரண்ட்டாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்! இருப்பேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில் – ‘ஓரணியில் தமிழ்நாடு’

# 5 தொகுதிகளில் 2 லட்சத்து 10 ஆயிரம் குடும்பத்தினர் இணைந்துள்ளனர்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தகவல்!



கடலூர், செப். 16-

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கடலூரில் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது;

கடலூரில் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கடந்த ஜூலை 1ம் தேதி தமிழக முதல்வர் இப்பணியை தொடங்கி வைத்தார். கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதியில் 2 லட்சத்து 10 ஆயிரத்து 649 குடும்பத்தினர் இணைந்துள்ளனர். மொத்தம் உள்ள 12,40,412 வாக்காளர்களில் 6,41,707 பேர் திமுகவில் இணைந்துள்ளனர். 2ம் கட்டமாக நாளை (15ம் தேதி) பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் வாக்குச்சாவடி அளவிலான தமிழகத்தை தலை நிமிர வைப்போம் என்ற உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழி கூட்டங்கள் நடைபெற உள்ளது. 1284 வாக்குச்சவாடியில் நடைபெறும் கூட்டங்களில் ஓரணியில் தமிழ்நாடு மூலம் திமுகவில் இணைந்தவர்கள் அனைவரும் பங்கேற்பார்கள். கிழக்கு மாவட்டத்தின் சார்பில் சிதம்பரத்தில் கூட்டம் நடைபெறுகிறது. கரூரில் 17ம் தேதி கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் திரளாக கலந்து கொள்கிறோம். கடலூர் தொகுதியில் 227 பூத்துகள் உள்ளது. 2 லட்சத்து 44 ஆயிரம் வாக்காளர்கள். இதில், 1,22,802 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இது 50 சதவீதம். 48 ஆயிரம் கைப்பேசி எண் மூலம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். குறிஞ்சிப்பாடியில் 259 பூத்துகளில் 49 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 1 லட்சத்து 43 ஆயிரம் உறுப்பினர்களை இணைத்துள்ளோம். புவனகிரியில் 284 பூத்துகளில் 1 லட்சத்து 26 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். சிதம்பரத் தில் 260 பூத்துகளில் 1 லட்சத்து 24 பேர் என 50 சதவீதம் வாக்காளர்கள் இணைந்துள்ளனர். காட்டு மன்னார்கோவிலில் 255 பூத்துகளில் 1 லட்சத்து 24 ஆயிரம் பேர் என 53 சதவீதம் வாக்காளர்கள் இணைந்துள்ளனர். கிழக்கு மாவட்டத்தில் 2 லட்சத்து 10 ஆயிரம் குடும்பங்கள் என 55 சதவீதம் வாக்காளர்கள் இணைந்துள்ளனர். இது இன்னும் அதிகரிக்கும்.

தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை கண்கூடாக பார்க்கிறீர்கள்.

என்எல்சி விவகாரத்தில் அன்புமணி ராமதாஸ் இரட்டை முகம் கொண்டு செயல்படுகிறார். என்எல்சியில் பாட்டாளி தொழிற்சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுங்கள் என கேட்கிறார். வெளியே என்எல்சியை மூட வேண்டும் என பேசுகிறார். அவர் வந்ததற்கு ஏதோ கில்லி போட்டு விட்டு செல்கிறார்.

அவர் நடத்திய போராட்டத்தில் விவசாயிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை.

என்எல்சி 3வது சுரங்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பே முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அன்புமணி எந்த உரிமையை மீட்க வந்துள்ளார் என மக்களுக்கே தெரியும்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது இட ஒதுக்கீடு போராட்டத்தில் பாமகவினர் மரத்தை வெட்டி போட்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபோராட்டனர். அப்போது 15 ஆயிரம் பேர் மீது வழக்கு பதியப்பட்டது. 21 பேர் குண்டடிப்பட்டு இறந்தனர். அதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கலைஞர் தான் 15 ஆயிரம் பேரின் வழக்குகளை திரும்ப பெற்றும், உயிரிழந்த 21 பேரின் குடும்பங்களுக்கு மாத ஊதியமாக ரூ 3 ஆயிரம் வழங்கி அவர்களை மொழிப்போர் தியாகியாக மாற்றினார்.

மத்திய அமைச்சராக அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட அவரது கட்சியினர் இருந்தபோது இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்தவர்களுக்கும், வழக்கு வாங்கியவர்களுக்கும் இவர்கள் என்ன செய்தார்கள் என கூற வேண்டும்.

கடலூர் சிப்காட் விவகாரத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திமுக அரசு மக்களுடன் வாழ்ந்து வருகிறது.

விஜய்க்கு கூடிய கூட்டம் சினிமா செட்டப் தான் ஷூட்டிங் நடந்தாலும் இதுபோன்று கூட்டம் கூடும். கொரானா காலத்தில் 2 ஆண்டு காலம் விஜய் எங்கு சென்று ஒளிந்து கொண்டார். அப்போது அவர் வெளியே வரவில்லை. கொரோனாவையும் பொருட்படுத்தாமல் முதல்வர் உள்ளிட்ட திமுகவினர் தான் உயிரை பணயம் வைத்து மக்களுக்காக பணியாற்றினார்கள்.

இசைஞானி இளையராஜாவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் மூத்த நடிகர்கள் கமலஹாசன் ரஜினிகாந்த் உள்ளிட்ட அனைவரும் தமிழக முதல்வரை பாராட்டுகின்றனர். ஏன் இளையராஜாவே பாராட்டுகிறார் என்றால் எந்த அளவிற்கு திமுக அரசு செயல்படுகிறது என்பது மக்களுக்கு தெரியும்.

சமூக நீதி பற்றி அன்புமணி பேசுவதற்கு தகுதியற்றவர். கடந்த 15 ஆண்டுகளாக இந்தக் கூட்டணியை வெற்றிகரமாக வைத்துள்ளோம். இதுவே சமூக நீதி தான். கலைஞர் காலத்தில் துவங்கப்பட்ட கூட்டணி இன்றும் தொடர்கிறது.

கடலூரில் மருத்துவ கல்லூரி அமைக்க திமுக ஆட்சியில் மருத்துவ கல்லூரிக்கு கடலூர் அருகே எஸ் புதூரில் அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பிறகு வந்த அதிமுக ஆட்சியில் இது திமுக கொண்டு வந்த திட்டம் என இங்கு அதிமுக அமைச்சராக இருந்த சம்பத் சிதம்பரத்தில் உள்ள ராஜ முத்தையா மருத்துவக் கல்லூரியை கடலூர் மாவட்ட மருத்துவமனை ஆக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

அதனை அப்போது கேட்க முடியாத அன்புமணி தற்போது எய்ம்ஸ் மருத்துவமனைக்காக அடிக்கல் நாட்டியது குறித்து துணை முதலமைச்சர் உதயநிதி செங்கலை காட்டியது உலகத்தையே ஈர்த்தது.

அது போல் தற்போது அவரும் புகழ் பெறலாம் என காட்டுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!




2025 செப். 17 – முப்பெரும் விழா – கரூர்
” ” 18 – வெண்ணந்தூர் ஒன்றியம் – நாமக்கல் கிழக்கு மாவட்டம்
” ” 19 – திருப்பூர் மாநகர் – திருப்பூர் மத்திய மாவட்டம்
” ” 20 – அவினாசி – திருப்பூர் வடக்கு மாவட்டம்
” ” 21 – காஞ்சிபுரம் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்
” ” 24 – புதுச்சேரி – புதுச்சேரி மாநிலம்
” ” 27, 28– தஞ்சை வடக்கு மாவட்டம்



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர், தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர் நேற்று செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வாணாபுரம் பகண்டைக் கூட்டுச்சாலையில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் எனும் தலைப்பில் உறுதிமொழி ஏற்றனர். மேலும் இந்த நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தோழர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# அண்ணாவின் பிறந்தநாள் எந்நாளும் வாழ்கவே!



வெல்போர்ப் பல்லவர்
வெகுகாலம் ஆண்டிருந்த
பல்கலை மாநகர்
பாரேத்தும் காஞ்சியில்
நல்லதொரு நெசவாளர்
நடுத்தரக்
குடும்பத்தில்
செல்லமாய்ப் பிறந்தவர்;
செழிப்பாக வளர்ந்தவர்!

கல்வியில் நாட்டமும்
கலைகளில் ஊட்டமும்

இல்லோர்பால் பேரீர்ப்பும்
இருப்போர்மேல்
போர்ஆர்ப்பும்
வல்லோர்மேல் நேரெதிர்ப்பும்
வறியோர்மேல் பெரும்பரிவும்
கல்லார்மேல் நற்கனிவும்
கற்றார்மேல் மெய்மதிப்பும்
நல்லோர்மேல் பேரன்பும்
நாடிநரம்பு ஊறியவர்
நல்வழி காட்டிட
நலிந்தோர்க்கு ஊட்டிடச்
செல்வழி தேடியே
சிந்தனை செய்தவர்!

பச்சையப்பன் கல்வியகம்
பகுத்தறிவு தன்மானம்
உச்சத்தில் இருந்தவிடம்
உயர்கல்வி தந்தவிடம்
மெச்சுமா றெங்கெங்கும்
மேன்மையாய் மிளிர்ந்தவிடம்
அச்சமிலா வாழ்வினை
அறிமுகம் செய்தவிடம்
நச்சியே வந்தவர்கள்
நல்லுறுதி கொண்டவிடம்
கொச்சைமொழி அல்லாது
கொஞ்சுமொழி பயிற்றுமிடம்

இச்சைகொண்டு அண்ணா
எல்லாமே கற்ற இடம்!
விச்சைபெற்று அரசியலில் வெண்கதிராய்
எழுந்த இடம்!

தமிழ்நாடு பெற்றபெருந்
தவப்பதல்வர் சிலர்,அவருள்
இமிழ்கடல் சூழ்ந்தெழும்
இனியதமிழ் நாட்டிலே அமிழ்தாக விளங்கிடும்
அடுக்கடுக்காய் மிகுந்திடும்
இமயம்போல் உயர்ந்திடும்
எழுச்சியை உவந்திடும்
தமையனாம் அண்ணாபோல் தலைவனைக் கண்டதில்லை!

தமிழுக்கும் தமிழர்க்கும்
தமிழ்நாட்டு தனக்கும்ஓர்
அமிழாத கப்பலாக
ஆழ்கடல் கடந்தவர்;
குமிழிகளாய் எதிரிகளைக்
கொண்டுடைத்துத்
தொடர்ந்தவர்,
நிமிர்கின்ற அலைகளை
நீராக்கி நடந்தவர்!

உமியல்ல தமிழரென்று
உலகினுக்கு உணர்த்தியவர்,
இமையாத நாட்டமுடன்
எப்போதும் உலவியவர்,
நமையாள நாமென்று
நாட்டிற்கு உரைத்தவர்,
தமையாளத் தக்கவன்
தமிழனென ஓதியவர்,
மமதையோ டெதிர்த்தவரை
மண்ணாக்கி மோதியவர்!

கமழ்கின்ற மலரவர்,
காலமெலாம் மணப்பவர்,
அமைதியாய்த் தோன்றியவர்,
அதிர்புரட்சி ஊன்றியவர்,
சமயங்கள் சாதிகளைச்
சல்லடையாய்ச் சலித்தவர்,
நமசிவாயம் இராமசெயம்
நரம்புகளை வலித்தவர்
சிமிழ்த்திடும் பகுத்தறிவுச்
சிந்தனையைத் தெளித்தவர்
உமிழ்ந்திடுக மடைமையென
உண்மையை அளித்தவர்
நமைச்சலெடுத்து அரசியலில் நாயாகக்
குரைத்தவர்கள்
குமைச்சலிடா தொழித்தவர்!
குரங்காட்டம் போட்டிருந்த
திமிரான தில்லிதான்
திகைத்துப்போய் நின்றிடத்
திமிலடக்கி வென்றவர்;
திராவிடத்தின் ஒன்றவர்!

இமயமும் இவர்பேச்சால்
இளகிநீர் ஆகிடும்,
தமிழுமே இவரெழுத்தால்
தனியாட்சி செய்திடும்!
சுமைதாங்கி ஆனவர்
துயர்ப்படும் தமிழருக்கு,
இமைகாத்தல் போலவே
எப்போதும் காத்தவர்!

ஆயிரம் கோடியாய்
அகல்வான்மீன் தோன்றினும்
ஞாயிறுபோல் ஆகுமா?
நானிலம் உயிர்க்குமா?
காயிலே வெம்பிய
கருத்திலாத் தலைவர்கள்
தீயிலே ஈசல்போல்
தெரியாமல் போகையில்
ஞாயிறாய் எழுந்தவர்
நற்றமிழர் ஒளிபெறத்

**பேராசிரியர் மா.செல்வராசன்**

தாயினும் பரிந்தவர்,
தலைவராய்ச் சிறந்தவர்!
கோயிலும் போகாமல்
கும்பிட்டுக் கிடக்காமல்
வாய்மையே வெல்லுமென
வளரறிவு மிகுந்தவர்!,
தூயவர், மக்களுக்குத்
தொண்டாற்றல் ஒன்றுதான்
ஆயபயன் என்றன்றோ
அண்ணா இரவுபகல்
ஓயுதல் இல்லாமல்
உறக்கமும் கொள்ளாமல்
மாயுமட்டும் எழுதியவர்,
மக்களிடம் முழங்கியவர்!
தேய்தலிலா நிலவவர்,
திசைமாறாத்
தென்றலவர்,
ஆயுதம் ஏந்தாமல்
அரசியலில் வென்றவர்!
காயிதமே கருவியாகக்
கையாண்ட வீரரவர்!
வாயிலுண்டு
வழியென்ற
வாய்மையில் வென்றவர்!

அரசியல் இயக்கமொன்றை
அண்ணா தொடங்காமல்
வருவது வரட்டுமென
வாளாக இருந் திருந்தால்

உரிமைக்குப் போராடும் உணர்ச்சிகள்
மடிந்திருக்கும்
வரம்பெற்றாற் போலிருந்த
வடவரின்
அடிமைகள்
உரம்பெற்றிங்கு
ஆண்டிருப்பர்
உயர்மானம் இழந்திருப்பர்
கரங்கட்டி நின்றிருப்பர்
காவடி எடுத்திருப்பர்
அரிசிக்கு வழியின்றி மக்களெலாம்
அலைந்திருப்பர்!

வரிசைகட்டி இந்திமொழி
வாயிலில் நுழைந்திருக்கும்
முரசுகொட்டி வாழ்ந்ததமிழ்
முதன்மையும் வீழ்ந்திருக்கும்
நரித்தன ஆரியம்
நாட்டாமை செய்திருக்கும்
புரியாத அரசியல்
புதர்மண்டிக் கிடந்திருக்கும்
மரியாதை கெட்டிருக்கும்
பகுத்தறிவு மாய்ந்திருக்கும்
கரிகாலன் ஆண்டநிலம்
களராகிப் போயிருக்கும்!

அரங்கேற்றிக் கழகத்தை
ஆளவைத்த அண்ணாவின்
கரம்பற்றி வளர்ந்தவர்கள
கருத்தாலே உயர்ந்தவர்கள்
முரண்பட்டுப் போனாலும்
முழுதாக ஆளுகின்றார்
பரம்பொருளாம் அவர்பெயரைப்
பகர்ந்தால்தான் வெற்றியிங்கு!
நிரந்தரமாய் அண்ணாவின்
நிழலிருந்தால் பெற்றியிங்கு!
உரந்தரும் பேச்செழுத்து
உரிமைதரும், பெருமைதரும்
சுரந்தெழும் நல்லறிவு;
சுருண்டுவிடும் அறியாமை!
பரந்தெழும் அரசியல்
பண்புடைமை அன்புடைமை!
இரந்தழுவோர்
இல்லாத
இன்பநிலை வளர்ந்தெழும்
கரந்தொழியும் ஊழலுடன்
கையூட்டும் பையூட்டும்!
சிறந்தொளிரும்
அண்ணாவைச்
சிந்தையில் வைத்திருந்தால்!

மடமைமிகு நாட்டிலே
மக்களுக்கு அறிவூட்டிக்
கடமையுடன் கண்ணியம்
கட்டுப்பாடு எனமூன்றும்
உடமையாய்க் கொள்கவென
உரைத்திங்கே உணர்த்தியவர்,
வடம்பிடித்துத் தேரிழுக்க
வருகவென மக்களுக்கு
இடமளித்து அழைத்தவர்;
இன்றுவரை அவரமைத்த
தடத்தில்தான் தளபதிதேர்
தடையின்றிப் போகிறது!

குடத்தினில் இருந்தவர்கள்
குன்றேறி வெல்வதற்குத்
திடத்தினைத் தந்தவர்;
திராவிடத் தலைவரவர்!

கடற்கரை மணலிலே
கருத்துறக்கம் கொண்டாலும்
தொடரலைகள் வாழ்த்துரைக்க,
சூரியன் ஒளியூட்ட
உடனுருந்து கலைஞரும் காத்திருக்கப்
படர்காற்றாய் உலவுவார்
பாருள்ள வரையிலே
அடர்ந்தென்றும் நிலவுவார்;
அருந்தமிழாய் இலகுவார்!

அண்ணாவின் பிறந்தநாள்
அருந்தமிழர்
சிறந்தநாள்!
எந்நாளும்
போற்றுவர்
இதயத்தில் ஏற்றுவர்
விண்காற்று விரிகடல்
வெண்கதிர் தண்மதி
வண்ணப்பண் எழுப்பிட
வளமாக இசைத்திட
அண்ணாவின் பிறந்தநாள்
எந்நாளும் வாழ்கவே!



விழுப்புரம் மத்திய மாவட்டச் கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், 32வது வார்டு, வழுதுரெட்டியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, வாக்குச்சாவடி எண் : 35 பகுதி குடும்பங்களுடன் தமிழ்நாட்டின் மண்மொழிமானம் காக்க, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். இந்நிகழ்வில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், பொதுக்குழு உறுப்பினர் பஞ்சநாதன், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் இரா.கண்ணப்பன், விழுப்புரம் மேற்கு நகர பொறுப்பாளர் இரா.சக்கரை, விழுப்புரம் கிழக்கு நகர பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல், நகர்மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.